# தோல் மருத்துவத்தில் லேசர் (LASER) சிகிச்சை

லேசர் (LASER) என்பது ஆங்கிலத்தில் Light Amplification by Stimulated Emission of Radiation என்பதன் சுருக்கமாகும்.

1. **தோல் நோய்களுக்கு சிகிச்சையளிக்க லேசர் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?**

   குறிக்கப்பட்ட தோல் (targeted skin) திசுக்களில் மாற்றங்களை ஏற்படுத்த ஒளி கதிர்கள் பயன்படுத்தப்படுகின்றன. லேசர் கதிர்கள் இலக்கு வைக்கப்பட்ட தோல் திசுக்களின் வெப்பநிலையை அதிகரித்து அவற்றை அழிக்கிறது. வெவ்வேறு வகையான லேசர் கதிர்கள் வெவ்வேறு வகையான தோல் திசுக்களை குறிவைக்கின்றன. உ-ம்: நிறமுடைய கலங்கள் (pigmented cell), ஹீமோகுளோபின், நீர்.

2. **லேசர் சிகிச்சையைப் பாவிக்கக்கூடிய தோல் நிலைமைகள் என்ன?**

   - தேவையற்ற முடியை குறைத்தல்
   - பிறப்பு அடையாளத்தை (birth mark) நீக்குதல்
   - முகப்பரு வடுக்கள் மற்றும் பிற தழும்புகளை குறைத்தல்
   - வரிதழும்பை (stretch marks) குறைத்தல்
   - தோலில் உள்ள சிறிய வளர்ச்சிகள் மற்றும் மருக்களை (wart) நீக்குதல்
   - தோல் மேற்பரப்பில் தெரியும் சிறிய இரத்த நாளங்களை குறைத்தல்
   - சூரிய பாதிப்பு மற்றும் வயதாகும் போது ஏற்படும் தோல் மாற்றங்களை குறைத்தல்
   - பச்சைகளை (tattoo) நீக்குதல்
   - தோலில் நிறமுள்ள திட்டுகளை (pigmented patches) குறைத்தல்

வெவ்வேறு வகையான தோல் பிரச்சினைகளுக்கு வெவ்வேறு வகையான லேசர் வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. லேசர் வகைகள் மற்றும் லேசரின் அளவு என்பன உங்கள் தோல் மருத்துவ நிபுணரினால் தீர்மானிக்கப்படுகிறது.

3. **லேசர் சிகிச்சையின் பக்க விளைவுகள் என்ன?**

   - லேசர் வகையைப் பொறுத்து பக்க விளைவுகள் வேறுபடும். தோல் எரிச்சல், சிவத்தல், சிகிச்சையளிக்கப்பட்ட பகுதிகளில் சிறிய பருக்கள்/ வீக்கம் ஏற்படலாம். இந்த நிலைமைகள் 2 -3 நாட்களுக்குள் குறையும்.
   - சூரிய ஒளியில் இருந்து தோலை சரியாக பாதுகாக்காதுவிட்டால் சருமம் நிறம் மாறலாம். இந்த பக்கவிளைவுகள் அனைத்தும் தற்காலிகமானவை.
   - அரிதாக தோலின் மேற்பகுதி கருமையாகி வலிமிகுந்த கொப்புளங்கள் தோன்றலாம். அப்படிஎன்றால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறவும்.

4. **பக்கவிளைவுகளை எவ்வாறு குறைக்கலாம்?**

- பக்கவிளைவுகளை குறைக்க சிகிச்சைக்கு முன்னும் பின்னும் மருத்துவ ஆலோசனையை முறையாக கடைப்பிடிப்பது அவசியம். லேசர் சிகிச்சை முறையில் தகுதியும் அனுபவமும் உள்ள மருத்துவரால் செய்யப்படவேண்டும்.
- லேசர் சிகிச்சைக்கு முன்னும் பின்னும் சூரிய ஒளியில் இருந்து பாதுகாப்பு பெறுவது அவசியம். இதற்காக சூரிய பாதுகாப்பு கிறீம் (sun cream), தோலை மறைக்கும் ஆடைகள் மற்றும் கறுப்பு குடை போன்றவற்றை பாவிக்கலாம்.

5. **யார் லேசர் சிகிச்சை எடுக்கக்கூடாது?**

- கர்ப்பிணித்தாய்மார்
- ஒளி உணர்திறன் கூடியவர்கள்.(photosensitivity)
- சூரிய ஒளியால் தோலில் எரிச்சல் (sun burn) ஏற்படுபவர்கள்
- சூரிய ஒளியால் தோலில் பல்வேறு நோய்களுக்கு உட்படுவோர்.
- சூரிய ஒளியால் தீவிரமடையும் உள் நோயால் (Internal Disease) பாதிக்கப்பட்டோர்.
- ஒளி உணர்திறன் கொண்ட மருந்து வகைகளை உட்கொள்பவர்கள்.

மேற்கூறிய முரண்பாடுகளை (contraindication) அடையாளம் காண லேசர் சிகிச்சைக்கு முன் மருத்துவருடன் விரிவான ஆலோசனை அவசியம்.

6. **லேசர் சிகிச்சையின் போது கண்கள் ஏன் மறைக்கப்படுகின்றன?**

கண் பாதிப்பு ஏற்படாமல் இருக்க கண்ணாடிகள் (goggles) நோயாளிகளால் அணியப்படுகின்றன.

7. **எப்போது லேசர் சிகிச்சை மீண்டும் செய்யப்படவேண்டும்?**

இது லேசர் வகை மற்றும் சிகிச்சை அளிக்கப்படும் உடலின் பகுதியைப் பொறுத்தது.

பொதுவாக 4 வாரங்கள் முதல் 8 வாரங்கள் இடைவெளிக்குப் பிறகு லேசர் சிகிச்சையை மீண்டும் செய்ய வேண்டும்.

8. **லேசர் சிகிச்சை எவ்வளவு வெற்றிகரமானதாக உள்ளது?**

லேசர் சிகிச்சையானது மிகவும் வெற்றிகரமான புதிய சிகிச்சை முறையாகும். ஆனால் அதன் செயல்திறன் தோல் பிரச்சினையைப் பொறுத்து ஆளுக்கு ஆள் வேறுபடலாம்.